**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate, Gingee.**

**CC.No.120/2022**

| | |
|---|---|
| Deposition of Witness for PW | : 7 |
| Name (திரு/திருமதி) | : ஆனந்தன் |
| Father's Name/ Husband's Name | : கலிவரதன் |
| Village & Taluk | : வளவனூர் |
| Calling | : உதவி ஆய்வாளர் |
| Age | : 36 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.03.2026**

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை :**

நான் செஞ்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிசெய்து வருகிறேன். கடந்த 30.06.2022 ம் தேதி இரவு 08.00 மணிக்கு செஞ்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது செஞ்சி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சிகிச்சையில் இருந்த அ.சா.1 சங்கர் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலைய குற்ற எண் 317/2022 இதச பிரிவுகள் 294(பி), 324, 506(ii)–ன் கீழ் மு.த.அ பதிவு செய்தேன். . **மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ–4–ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு 01.07.2022 காலை 08.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மஸ்தான் மற்றும் சதாம்உசேன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மேற்படி மாதிரி வரைபடம் முறையே அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு இவ்வழக்கின் சாட்சிகள் சங்கர், சேட்டு, ஏழுமலை ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு சம்பவம் உண்மையென தெரியவந்ததால் இவ்வழக்கின் எதிரி முருகன் என்பவரை கைது செய்ய தேடியபோது அவர் முன் பிணை உத்தரவு பெற்று பிணையில் சென்றுவிட்டபடியால் அவரை கைது செய்ய இயலவில்லை.

பின்பு இவ்வழக்கில் காயமடைந்த அ.சா1 சங்கர் என்பவருக்கு சிகிச்சை வழங்கிய செஞ்சி அரசு ம.ம மருத்துவர் திரு. பாலகோபால் என்பவரை விசாரித்து அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு காயச் சான்று பெற்றேன். மேற்படி காயச்

சான்றில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை கொடுங்காயம் என கூறி சான்று வழங்கினார்.

பின்பு இவ்வழக்கில் காயமடைந்த அ.சா.1–ற்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்பதால் சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை மூலம் வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(பி), 324, 506 (ii) இ.த.ச – வை 294(பி), 326, 506 (ii) இ.த.ச என பிரிவு மாற்றம் செய்தேன். **மேற்படி சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

பின்பு நான் இவ்வழக்கின் விசாரணையை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 326 506(ii) –ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. காயமடைந்த அ.சா.1 பொற்குணம் கிராமத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். சம்பவம் சிங்கவரத்தில் நடைபெற்றது என்றால் சிங்கவரம் ஏரியில் நடைபெற்றது. பொற்குணம் கிராமத்திற்கும் சிங்கவரம் ஏரிற்கும் இடையே சுமார் 3 கிமீ துாரம் இருக்கும். அ.சா.1 மேற்படி ஏரிக்கும் ஏன் வந்தார் என்று நான் விாசரித்தேனா என்றால் அவர் மேற்படி ஏரியில் இருந்து மீன்களுக்கு காவல் வேலையில் ஈடுபட்டிருந்ததாக எனது விசாரணையில் தெரிய வந்தது. சம்பவத்தின்போது அவர் காவல் பணியில் ஈடுபட்டிருந்தார் என்பதை நிரூபிக்கும் வகையில் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. மேற்படி ஏரி பொதுப்பணித்துரைக்கு சொந்தமானதா அல்லது கிராமத்திற்கு சொந்தமானதா என்பதை நான் விசாரித்தேனா என்றால் இல்லை. மேற்படி ஏரியில் இருந்த மீன்களை பொதுப்பணித்துரை ஏலத்தில் விட்டதா அல்லது கிராம பஞ்சாயத்தார்கள் ஏலத்தில் விட்டார்களா என்பதை நான் விசாரித்தேனா என்றால் இல்லை.அ.சா.1 யாருடைய உத்தரவின் பேரில் ஏரியில் இருந்த மீன்களுக்கு காவல் பணிக்கு வந்தார் என்பதை விசாரித்தேனா என்றால் இல்லை.

3. அ.சா.1 அவர் அளித்த புகார் வாக்குமூலத்தில் சம்பவம் எங்கு நடந்தது என்பதை குறிப்பாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல, சிங்கவரம் ஏரியில் நடைபெற்றதாக குறிப்பிட்டுள்ளார். ஏரியின் எந்த பகுதியில் சம்பவம் நடைபெற்றது என்பதை அ.சா1 புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அ.சா.1 நீதிமன்ற சாட்சியத்தில் ஏரியின் ஒரு பகுதியில் பள்ளம் போட்டிருந்ததாகவும், அதற்காக அங்கு கடப்பாறை மற்றும் மண்வெட்டி வைத்திருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார் மேற்படி விரவத்தை எனது விசாரணையின் போது குறிப்பிட்டாரா என்றால் இல்லை.

4. கடப்பாறையின் கூர்மையான பகுதியினை வைத்து எதிரி அ.சா.1 யை தாக்கினாரா அல்லது அடிப்பகுதியை வைத்து தாக்கினாரா என்ற விவரத்தை எனது விசாரணையின்போது குறிப்பிட்டாரா என்றால் மேற்படி கடப்பாரையை

ஓங்கி அடித்ததாக மட்டும் என்னுடைய விசாரணையில் குறிப்பிட்டுள்ளார். அ.சா.1 என்னிடம் குறிப்பிட்டுள்ளது போல் எதிரி அவரை தாக்கியிருந்தால் அவருக்கு குத்துக்காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல, அ.சா.1 எனது விசாரணையின்போது எதிரி அவரை ஓங்கி அவரது வலது காலில் அடித்ததாகவும் மற்றும் மீண்டும் ஓங்கி காலில் குத்தியதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

5. அ.சா.1 என்னிடம் குறிப்பிட்டது போல் அவருக்கு அடிப்பட்டிருந்தால் அவருக்கு இரண்டு காயங்கள் ஏற்பட்டிருக்க வேண்டும் என்றால் அதை பற்றி நான் விசாரிக்கவில்லை. அ.சா.1ன் X ray அறிக்கையை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.சா.1க்கு எலும்பு முறிவு ஏற்பட்டது என்பதை காண்பிக்கும் வகையிலான ஆவணங்களை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அவரது விபத்து பதிவேட்டினை தாக்கல் செய்துள்ளேன்.

6. இவ்வழக்கில் தொடர்புயை ஆயுதத்தை நான் கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிரியை கைது செய்ய இயலாத காரணத்தினால் அவரிடம் இருந்து ஆயுதத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் சொல்வது போல் சம்பவம் நடைபெறாத காரணத்தினால் தான் எதிரியை நான் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. சம்பவ இடம் என்பது ஏரிக்குள் அமைந்துள்ளது என்றால் சரிதான். அ.சா1ற்கு ஏற்பட்ட காயமானது அவர் பள்ளம் வெட்டும்போது அவராகவே ஏற்படுத்திக்கொண்டது என்றாலும், இவ்வழக்கை நான் சரிவர விசாரணை செய்யாமல் எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

7. புகார் வாக்குமூலத்தில் மேலொப்பம் என்னால் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகசர் மற்றும் வரைபடம் என்னால் தயார் செய்யப்பட்டவை அல்ல என்றால் சரியல்ல. மேற்படி மூன்று ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் வெவ்வேறு விதமாக உள்ளது என்றால் சரியல்ல.குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறு விசாரணை :** இல்லை.

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

Sd/–B.Vidhya

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

செஞ்சி.